கோப்பு.எண். அ2/5884/2021 நாள்:12.04.2022

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

## (ஒரு உறை முறை)

1. ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் : தி.சாருஸ்ரீ இ.ஆ.ப.,
   பதவி : ஆணையாளர்,
   முகவரி : தூத்துக்குடி மாநகராட்சி

2. திட்டத்தின் பெயர் : சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–22

அ) செய்யப்படும் பணிகள் சம்பந்தமாக

| வ. எண் | மதிப்பீட்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில் ரூ.) | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி நமுனா +12 % GST வரி | பணிக்கான காலம் | ஒப்பந்ததாரரின் தகுதி (புதிய வகுப்பில்) |
|---|---|---|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–22 | | | | | | | |
| 1 | 2/22–23 /AEE(S) | பிரையண்ட் நகர் 7வது குறுக்கு தெரு மற்றும் மன்னாரன் காலனியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 16.00 | 16,000/– | 6720/– | 2 மாதம் | 3ம் நிலை மற்றும் அதற்கு மேல் |
| 2 | 3/22–23 /AEE(S) | 3 செண்ட் ஐந்தாவது குறுக்கு வடக்குத் தெருவில் தார்ச் சாலை அமைக்கும் பணி | 9.50 | 9,500/– | 3360/– | 2 மாதம் | 4ம் நிலை மற்றும் அதற்கு மேல் |
| 3 | 4/22–23 /AEE(W) | ராஜகோபால் நகர் 10வது தெரு மேற்குப் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மற்றும் மின்மோட்டார் அமைக்கும் பணி | 12.50 | 12,500/– | 6720/– | 2 மாதம் | 4ம் நிலை மற்றும் அதற்கு மேல் |

ஆ) பணி நடைபெறும் மாவட்டத்தின் பெயர் : தூத்துக்குடி

2. எந்த இடத்தில் எந்த தேதி வரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக படிவம் கிடைக்கும் விபரம் : தூத்துக்குடி மாநகராட்சி மையஅலுவலகம், ஒப்பந்தப்புள்ளி 27.04.2022 மாலை 3.00 மணி வரை (விடுமுறை நாட்களை தவிர) மற்றும் www.tenders.tn.gov.in, என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி குறித்த முழு விபரங்கள் பெறலாம்.

4. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்படுவதற்கான கடைசி நாளும் நேரமும் : 27.04.2022 மாலை 3.00 மணிவரை

5. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடம்; நாள் நேரம் : தூத்துக்குடி மாநகராட்சி மைய அலுவலகம் 27.04.2022 மாலை 3.30 மணிக்கு

6. ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொறுத்தமானது எனத் தீர்மானிக்கும் முக்கிய விவரங்கள் : ஆணையாளர்

## நிபந்தனைகள்

1) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவோ நிராகரிக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு
2) நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதியினை மாற்றவோ ஒத்திவைக்கவோ ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.
3) ஒப்பந்தப்புள்ளிதேதி பெறப்படும் நாள் எதிர்பாராத விதமாக விடுமுறைநாளாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலை தினத்தில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.
4) ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டும்.
5) ஒப்பந்தவிபரப்படி மேற்குறிப்பிட்ட காலவரையறுக்குள் பணிமுன்னேற்றம் இல்லாதநிலை இருப்பின் ஒப்பந்தவிதிகளின்படி நாளொன்றுக்குஅபராதம் விதிக்கப்படும்.
6) அபராதம் விதிக்கப்பட்டும் பணிகளில்தொடர் முன்னேற்றம் இல்லாதிருந்தால் வேலைஉத்தரவு இரத்து செய்ய நடவடிக்கைமேற்கொள்ளப்படும்.
7) ஒப்பந்தப்பணிகளில் குழந்தைதொழிலாளர்களை பணியமர்த்தக்கூடாது.
8) ஒப்பந்தப்பணிக்கான பட்டியல் தொகைபெறுவதற்கு, ஒப்பந்தப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களின் தொழிலாளர் வைப்புநிதி செலுத்தியமைக்கான ஆதார ஆவணங்கள் இணைத்து சமர்பிக்கப்பட வேண்டும்.
9) ஒப்பந்தப்பணிகள் மேற்கொள்ளும் போது ஒப்பந்ததொழிலாளர்கள் உரியபாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்திட வேண்டும்.
10) ஒப்பந்தப்பணிகள் அனைத்தும் ஒப்பந்தவிதிகளின்படி முழுஅளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
11) மாநகராட்சி பொறியாளரால் பணியின் தரம் குறைவாக கண்டறியப்பட்டால் அதற்கான பட்டியல் வழங்கப்படமாட்டாது. நிதி இழப்புக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். ஒப்பந்ததாரர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.
12) பணிநடைபெறும் பொழுது பொறியாளரின் மற்றும் உதவி கணினி திட்ட அமைப்பாளர் அறிவுரையின்படி பணிகள் செய்து முடிக்க முழு ஒத்துழைப்பு தரப்பட வேண்டும்.
13) வேலை உத்திரவு கிடைக்கப் பெற்ற 7 தினங்களுக்குள் ரூ.20/– மதிப்புள்ள முத்திரைதாளில் பணிக்கான ஒப்பந்தப் பத்திரம் எழுதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
14) ஒப்பந்தப்புள்ளி பதிவு அல்லது நடப்பில் புதுப்பித்ததை நகல் சமர்ப்பிக்கப்படவேண்டும்
15) ஒப்பந்தப்பத்திரம் செயல்படுத்தும் போது (PERT- Chart) (Programme Evaluation Review Technique) இணைக்கப்பட வேண்டும்

(ஒம்) திருமதி.தி.சாருஸ்ரீ இ.ஆ.ப.,
ஆணையாளர்
தூத்துக்குடி மாநகராட்சி

/உ.ந.உ.ப/

ஆணையருக்காக
தூத்துக்குடி மாநகராட்சி

12/4/2022

நகல்–

1) மாண்புமிகு மேயர் அவர்கள் மேஜைக்கு
2) ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் அவர்கள் மேஜைக்கு,
3) உதவிசெயற்பொறியாளர் / மண்டல உதவி ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி,
4) மாநகராட்சி விளம்பர பலகை.